கிராமங்களில் மண்பாண்டத் தொழில்

* 97 வினு.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடை யளிப்பாரா—

கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மண்பாண்டத் தொழிலை எல்லா கிராமங்களுக்கும் விஸ்தரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : இல்லை.

* 98 வினு.—திரு. என் கிட்டப்பா : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடை யளிப்பாரா—

கிராமங்களில் மண்பாண்டத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர் கட்கு கதர்—கிராமத் தொழில் வாரியம் மூலமாக தொழிற் கருவி கள் வழங்க திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : தலைவரவர்களே, புது வகை சக்கரங்கள், அச்சுகள் வழங்கும் திட்டம் செயல்பட்டு வருகிறது.

Price of mud pots in Salem district

* 99 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether it is a fact that the price of the mud pots has gone up in Salem district during August 1971; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : கதர்-கிராமத் தொழில் வாரியத்தால் செய்யப்படும் மண்பாண்டங்களுடைய விலையில் விலை ஏற்றம் எதுவும் இல்லை.

மெரிஞவில் புதிய கலங்கரை விளக்கு

* 100 வினு.—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மெரிஞ கடற்கரையில் புதிய கலங்கரை விளக்கு கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா?

(இ) ஆமெனில், எவ்வளவு தொகையில் கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : தலைவரவர்களே.

(அ) ஆம்.

(இ) ரூ. 13,23,000.